70

<u>சென்னை-35, உள்ளாட்சி நிதித் தணிக்கை, இயக்கக துணை இயக்குநர் அ.வர்களின்</u>

<u>செயல்முறை ஆணை</u>

<u>ஆணை பிறப்பிப்பவர் - திரு. சௌ. இரவிச்சந்திரன், பி.எஸ்சி.,</u>

<u>துணை இயக்குநர்</u>

துணை இயக்குநர் அலுவலகம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
18 AUG 2021

<u>செ.மு.ஆ.ந.க.எண். ப & நி. II (6) / 13913 / 2020. நாள். 11.08.2021</u>

பொருள்:- பணி - உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் மாநில அரசு தணிக்கைத் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - 2018-19 - ஆம் ஆண்டுக்கான காலியிட மதிப்பீட்டின் படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய போட்டித் தேர்வு மூலம் நேரடி நியமனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள்- பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுவது- தொடர்பாக.

பார்வை:-
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடிதம் எண். 2390 /PSD-I/2020, நாள் 28.05.2020
2. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் அலுவலக செயல்முறை ஆணை ந.க.எண். ப & நி. II (6) / 13913 / 2020. நாள்: 12.10.2020
3. மாநில அரசு தணிக்கைத் துறை, இயக்குநர் அலுவலக செ.மு.ஆணை. ந.க.எண். 9058/ பநி2/2020, நாள்.15.10.2020

❖ ❖ ❖

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் மாநில அரசு தணிக்கைத் துறைகளில் 2018-2019ஆம் ஆண்டுக்கான காலிப்பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற போட்டித் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டு பார்வை (1)-இல் காணும் கடித வழி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களுக்கு பார்வை (2) மற்றும் (3) இல் காணும் செயல்முறைகள் வழி பணி நியமன ஆணைகள் வெளியிடப்பட்டு தனியர்கள் பணியமர்த்தப்பட்ட அலுவலகத்தில் இணைப்பில் காணும் விவரப்படி பணி சேர்ந்துள்ளனர். பார்வை (1)-இல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு , நேரடி நியமன இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள இவர்களது உடற்தகுதிச் சான்றிதழ்கள் இத்துறையில் பணிசேரும் நாளில் ஏற்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இவர்கள் இளநிலை உதவியாளர்களாக

பணி சேர்ந்த நாள் முதல் இத்தனியர்களின் பணி தமிழக அமைச்சுப்பணி தொகுதி 22 தரம் 14-ன்படி முறையே ஒழுங்குபடுத்தப்பட்டு, இவர்களின் பெயர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிசேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் ரூ.19500-62000(நிலை-8) என்ற ஊதிய நிரக்கில் வரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

2) இத்தனியர்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள் 32 (a)(i) -ன்படி இளநிலை உதவியாளர்களாகப் பணி சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயிக்கப்படுகிறது.

3) இத்தனியர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின் விதி 34-ன் இணைப்பு V-ன் கீழ் 8 ன்படி தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையத்தினால் நடத்தப் பெறும் தமிழ்நாடு அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்யும் நிலையிலேயே தகுதிகாண் பருவம் முடித்தாக விளம்பி ஆணையிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4) இச்செயல்முறை ஆணையில் இணைக்கப்பட்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள பணியாளர்களின் பணிவரன்முறையானது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு தெரிவாளர்கள் இனச்சுழற்சிக்குட்படுத்தப்பட்டு முதுநிலை வரிசைகிரமப்படியோ (அல்லது) பணிநியமனம் செய்யப்பட வேண்டிய வரிசைகிரமப்படியோ அனுப்பப்படவில்லை என்பதால் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து பெறப்படும் முதுநிலை பட்டியலின்படி தனியர்களின் முதுநிலை பின்னர் நிர்ணயம் செய்யப்படும் என்ற நிலைப்பாட்டிற்குட்பட்டு வெளியிடப்படுகிறது.

5) பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட கீழ்க்கண்ட நிலைக்கு உட்பட்டும் தனியர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the W.Ps pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in combined civil services examination –IV for the year 2018-2019 and 2019-2020".

6) இப்பணிவரன்முறை ஆணை விவரத்தினை உரிய பதிவேடுகளில் பதியப்படுவதை உறுதிசெய்து கொள்ளவேண்டும்.

7) உடற்தகுதிச் சான்றுகள் தனியர்களின் பணிப்பதிவேட்டுடன் இணைத்து வைக்கப்படவேண்டும்.

8) இச்செயல்முறை ஆணை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை அளிக்கப்பட வேண்டும்.

12/08/2021

**துணை இயக்குநர்**

12/08/21

**இணைப்பு** : பட்டியல்

**பெறுநர்:**

சம்பந்தப்பட்ட பணியாளர்கள் - அலுவலக தலைவர் மூலமாக

**நகல்:**

1) இயக்குநர், மாநில அரசு தணிக்கைத் துறை, சென்னை -35. (முகப்பு கடிதத்துடன்)

2) இயக்கக இணை இயக்குநர் /துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்(நி) /

3) சார்நிலை அலுவலகங்கள் / வகை II-இன்படி

4) உபரி-5

இணைப்பு

(தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண். 2390 /PSD-I/2020, நாள் 28.05.2020 -இல் குறிப்பிடப்பட்ட வரிசைப்படி)

| வ. எண் | பெயர் (திரு/திருமதி/ செல்வி) | பணிபுரியும் அலுவலகம் | பணி சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | V. கீதா | உதவி இயக்குநர் அலுவலகம், மாநில அரசு தணிக்கைத் துறை, ஈரோடு | 21.10.2020 மு.ப | 21.10.2020 மு.ப |
| 2. | S. மதுனப்பிரியா | உதவி இயக்குநர் அலுவலகம், மாநில அரசு தணிக்கைத் துறை, கரூர் | 21.10.2020 மு.ப | 21.10.2020 மு.ப |
| 3. | R. செல்வக்குமார் | துணை இயக்குநர் அலுவலகம், நகரத் தணிக்கை, மாநில அரசு தணிக்கைத் துறை, சென்னை - 35 | 21.10.2020 மு.ப | 21.10.2020 மு.ப |
| 4. | M. செல்வி | உதவி இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை. கரூர் | 21.10.2020 மு.ப | 21.10.2020 மு.ப |
| 5. | R. அருண்குமார் | உதவி இயக்குநர் அலுவலகம், மாநில அரசு தணிக்கைத் துறை, தருமபுரி | 21.10.2020 மு.ப | 21.10.2020 மு.ப |
| 6. | E. கீதாமொழி | உதவி இயக்குநர் அலுவலகம், மாநில அரசு தணிக்கைத் துறை, சேலம் | 21.10.2020 மு.ப | 21.10.2020 மு.ப |
| 7. | M. தனுஸ்யா | துணை இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, திருச்சி மாநகராட்சி தணிக்கை. | 14.10.2020 மு.ப | 14.10.2020 மு.ப |
| 8. | M. ராஜ்மோகன் | உதவி இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை. மதுரை | 21.10.2020 பி.ப | 21.10.2020 பி.ப |
| 9. | N. புவனேஸ்வரி | இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை. சென்னை - 35 | 19.10.2020 மு.ப | 19.10.2020 மு.ப |

8/7/22

துணை இயக்குநர் (மு.கூ.பொ.)
உள்ளாட்சி நிதித் தணிக்கை
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
திருச்சிராப்பள்ளி – 1

த.பி.பா

D:\P & A II (6)\P & A II (6) Proc.doc

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | D. நேர்த்திகா | உதவி இயக்குநர் அலுவலகம், மாநில அரசு தணிக்கைத் துறை, காஞ்சிபுரம் | 21.10.2020 முப | 21.10.2020 முப |
| 11. | A. நீலாவதி | உதவி இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, வேலூர் | 14.10.2020 முப | 14.10.2020 முப |
| 12. | M. கோகுல்ராஜ் | உதவி இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, திருவண்ணாமலை | 21.10.2020 முப | 21.10.2020 முப |

16/08/2021

துணை இயக்குநர்

12/08/21